சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஞு மார்கழி மீ ச-உ வெள்ளிக்கிழமை (19 - 12 - 1975) [இல: ௩எ

# சிவ தருமம்

## என்ன என்பதைத் தெளியத் தெருட்டும் சிந்தனைச் செல்வம்

நாவலர் பெருமான் பிரமோதூத ஆண்டு [1870] "உதவுங்கள்" என்று நவின்ற நல்லுரையைப் படிப்போம். மீண்டும் படிப்போம்; படித்து அவ்வண்ணம் நடக்க முடிவு எடுப்போம்;

பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமானது திருவருளினாலே நான் யாழ்ப்பாணத்துள்ள புண்ணியவான்கள் சிலர் உபகரித்த பொருள் கொண்டு சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலும் வித்தியாசாலை தாபித்து நடத்திக்கொண்டு வருதல் எல்லாருக்குந் தெரியுமே. அந்த வித்தியாசாலைகளின் வரலாறும், வரவு செலவு இருப்புக் கணக்கும், பிறவும், நான் அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய ஆவேதனங்களினால் நன்றாக விளங்கும். இவ்

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

உ

## திரு. கு. அம்பலவாணபிள்ளை அவர்களின் பிரிவு

[ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ]

தமிழுலகம் போற்றும் பெரும் புலமையாளர்களான தமது அருமைத் தந்தையார் அவர்களின், உயரிய - விலைமதித்தற்கரிய - பலதுறைப்பட்ட - நற்குடிப் பண்புகளை, நினைவு கூரத்தக்க வகையில் வாழ்வாங்கு வாழ்ந்த பெருந் தகைமையாளர் திரு. அம்பலவாணபிள்ளை அவர்கள்.

எங்கே ஒரு நல்லகாரியம் நடக்குமோ, அங்கே நிச்சயமாகப் பிள்ளை அவர்களின் பங்கும் இருக்கும்.

இத்தகைய பிள்ளை அவர்களின் பிரிவு ஈடு செய்தற்கரியது. அவர்களின் ஆத்ம சாந்தி குறித்து இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## இசையோடு இயல் அமைக்கும் இன்பப் பிரசாரகர்

### நல்லை ஆதீன மகாசந்நிதானத்துக்கு பாரதத்தில் நல்லாசி

(முன் வளர்ச்சி - 2)

சுவாமிகளுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு அவர்களுடன் சிறிது நேரம் பேசலாம் என்று காத்திருந்தேன். அப்போதுதான் நல்லைஆதீனத்தில் திருவாதவூரடிகள் திருச்சரிதக் கதாப்பிரசங்கத்தைப் பூர்த்தியாக்கிவிட்டு, பூசை ஆராதனை தரிசனம் முடித்துக்கொண்டு சுழத்துச் சிதம்பர தேவஸ்தானத்துத் திருவெம்பாவைவிழாவிலே இன்னிசைப் பிரசங்க நிகழ்ச்சியை நடாத்தச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள், சுவாமியவர்களைச் சந்திப்பதற்குத் தொடர்ந்து அன்பர்கள் வந்துகொண்டிருந்தமையால் அவரோடுஒருஐந்து நிமிடங்கள் பேச வேண்டுமே

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ

திருச்சிற்றம்பலம்

போற்றி யருளுகநின்
ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின்
அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும்
ஈறும் இணையடிகள்
போற்றிமா லான்முகனுங்
காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட்
கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ
ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்.

— மணிவாசகர்.

## கவிப் பெரியார் பிரிந்தனர்

—o—

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களின் புதல்வரான கவிசிந்தாமணி, புலவர்மணி சோ. இளமுருகனார் புதனன்று இறைவனடி சேர்ந்தார்.

ஈழத்துச் சிதம்பரபுராணம் ஆகிய பல நூல்களின் கர்த்தாவாகவும் கவிச்சக்கரவர்த்தியாகவும் தமிழ் இலக்கியப் பேராசானாகவும் விளங்கினார்.

பரமேசுவரா ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் உடுவில் கலாசாலையில் பேராசானாகவும் கடமையாற்றியவர்.

இவரின் பிரிவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும். — —

இங்கிலாந்துக்கும் இலங்கைக்கும்


## தொலைபேசித் தொடர்பு

நேரடியாகக் கொழும்புக்கும் இலண்டனுக்கும் தொலைபேசித் தொடர்பு இன்று ஆரம்பிக்கப்படுகின்றது. — —

## எம். பி. கள் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்திய லோகசபை (பாராளுமன்றம்) உறுப்பினர்களின் எண்ணிக்கை 522 இல் இருந்து 542 ஆக அடுத்து வரும் தேர்தலின்போது அதிகரிக்கப்படும் பாரத துணைக்கண்டத்தில் அடுத்த பொதுத் தேர்தல் 1976-ம் ஆண்டு மூன்றாம் மாதத்தில் நடைபெறலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

## பழம்பெரும் சைவத் தொண்டர் மரணமடைந்தனர்



## முதலியார் முத்துத்தம்பி அவர்களின் முதன்மையான பணி

சைவபரிபாலன சபையின் நெடுங்கால அங்கத்தவரும் பல்லாண்டுகள் உபதலைவரும் ஆகிய முதலியார் முத்துத்தம்பி அவர்கள் இவ்வுலகவாழ்வு நீத்தனர் என்ற சோகச்செய்தி கிடைத்திருக்கின்றது.

முதலியார் அரசினர் சேவையிலிருந்து ஓய்வெடுத்த பின்னர் பொதுநல சேவையிலும் சமயத் தொண்டிலும் ஈடுபட்டிருந்தனர்.

மாநகரசபை உறுப்பினராக இருந்த காலத்தில் நகருக்குப் பல திருத்தங்களுக்குரிய ஆலோசனை பகர்ந்து வந்தனர். யாழ் பொதுசன நூல்நிலையத்திலும் பெரிதும் கவனமெடுத்த முதலியார் சைவபரிபாலன சபையிலே அருந்தொண்டாற்றிவந்ததுமன்றித் தாம் அரிதில் முயன்று சேகரித்த நூல்கள் பலவற்றைச் சபை நூல்நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்தனர். இந்த வைபவம் 1974 சைவ மாநாட்டின் பொழுது சிறப்பாக நிகழ்ந்தது.

சபையார் தமது அநுதாபத்தை முதலியார் குடும்பத்தாருக்கும் சுற்றத்தவர்களுக்கும் செலுத்துகின்றனர்.

## ஈமக்கிரியைகள்

அமரராகி விட்ட முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களின் ஈமக்கிரியைகள் நாளை மறுதினம் (21-12-75) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது,

## பூட்டோ நாடு திரும்பினர்

நான்கு நாள் உத்தியோக பூர்வமான நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த பாக்கிஸ்தான் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ நாடு திரும்பியுள்ளார்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

இராக்ஷத ஹூ மார்கழி மீ ௪-௨ வெள்ளி

## மார்கழியில் விநாயகர் வழிபாடு

சைவமரபு பழையது. சாலச்சிறந்தது. வாழ்க்கையின் மாண்புக்குரியது தெய்வநம்பிக்கைச் சிந்தனையில் மெய்ப்பொருளை அறிந்துணர்ந்துய்ய வழிவகுப்பது முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே என்றாங்கு இந்தப் பழம்பெரும் வழக்கம் தொன்று தொட்டுள்ள தொன்மைத் தாகையாற் சைவ வாழ்வு செவ்விதாய் விளங்கும் என்க.

புதுமை புகுந்தபின்னும், பழைமை பழைமையாக இருக்கும் பண்பு சைவ மரபின் செம்மைச் சின்னம் என்பதற்கு இன்றும் சைவப் பெரும் குடிகள் பேணி வரும் பழக்க வழக்கங்களே சான்றாகும். இவற்றுள் ஒன்று மார்கழித் திங்களிலே இல்லங்களில் எல்லாம் பிள்ளையார் பிடித்துவைத்துக் கோல நன்னீறு சாத்தி வைகறைப் பொழுதினில் வழிபாடியற்றல். சைவ மகளிர் இந்தப் புனிதப்பணியை ஊக்கமாய் ஆற்றித் தங்கள் வீடுகளை மங்கலமாகத் திகழவைக்கும் மரபு மனத்தைக் கவர்வதொன்றாகும். வீட்டு வாயிலே கோயிலாகப் புனிதங் காட்டுவதைக் காணும்பொழுதெல்லாம் உள்ளத்துவகை எழுதல் மட்டுமன்று, வாழ்க்கையின் மாண்பையும் சுட்டிக் காட்டும் உணர்ச்சியும் உண்டாகின்றது.

திருவாக்கும் செய்கருமங்கைகூட' விநாயகப் பெருமானை வீட்டு மூற்றத்திலே பசுவின் சாணத்திலே அமைத்து விடியற் பொழுதிலே இல்வாழ்வானும், இல்லக்கிழத்தியும் மங்கலமகாரும் வணங்கி நாளாந்த அலுவல்களை மேற்கொள்வதின் சீரும் சிறப்பும் அவ்வித ஒழுக்கத்தில் நிற்பவர்களுக்கே விளங்கும் "திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும் கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும் பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும் பெருகுமாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்" என்று கருமமாற்றுவார் திருவருளை நாடி அரும் பயன் அடைவார்கள்.

புனிதனாகிய பரம்பொருளை வழிபடுபவர்களும் புனிதராகின்றனர். அவர்கள் உள்ளும் புறம்பும் புனிதத்தைப் புனைவதற்கு தங்கள் இல்லங்களை ஆலயங்களாகக் கணித்து அவற்றைத் தூய்மையாக வைத்திருப்பர். வீட்டு வாயிலில் விநாயகப் பெருமானின் உருவம் இருப்பதனால் அந்தச் சுற்றாடல் சுத்தமாகவே துலங்க வேண்டும், புனித உணவன்றிப் புலால் ஆங்கிடம் பெறவொண்ணாது. இத்தகைய சுத்தத்துக்கிடமாகிய இல்லத்தில் வாழ்க்கையன்றோ உத்தமமான சைவவாழ்க்கை.

எனவே சைவமக்கள் தங்கள் பழைய மரபின்வழி வாழப்பழகுதல் வேண்டும். இந்தப் பாரம்பரியத்தைப் பேணி இடர்களைந்து இன்னலின்றி இறைநெறி நிற்கும் நிறைவை எய்துதல் வேண்டும். ஆகவே மார்கழி மரபை மாண்புடன் நிலைநாட்டுவோம்

## சபையின் முதலாவது தலைவர்

### வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களின் நினைவு

புராணபடன வித்துவ விமர்சகராய் விளங்கியவரும் நாவலர் பெருமானின் மருகரும் ஆகிய வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையின் நினைவு தினம் நேற்று.

நாவலர் நற்றகையாரை எண்ணும் பொழுதெல்லாம் வித்துவசிரோமணியின் எண்ணமும் எழுவதியல்பு. காரணம் ஒரே காலத்தில் இருவரும் தமிழகப் பேரறிஞர்களாகப் பிரசித்தி பெற்றவர்கள்.

சைவபரிபாலன சபையின் ஆரம்ப ஆண்டுத் தலைவராகவிருந்து சைவத் தொண்டாற்றிய வித்துவ சிரோமணியின் நினைவு நிரந்தரமாகவுள்ளதொன்று.

## திருக்கோயில் வழிபாடு

[ சைவப்புலவர் வ. சுப்பிரமணியம் ]

கடவுள் எங்கும் நிறைந்த பொருள்; உலகத்திலே காணும் ஒவ்வொன்றிலும் அவர் விளங்குகின்றார். இது பொது விதி. சிறப்பாகக் கூறுமிடத்து எந்த இடத்தில் மனம் அன்புகனிந்து இறைவனோடு கூடுகின்றதோ அங்கே கடவுளின் திருவருட்கருணை நிறைந்து நிற்கும். நமது முன்னோர்கள், கடவுளை அவ்விதம் காணமுடியாத மக்களுக்காகக் கோயில்களையும் கடவுள் திருவுருவங்களையும் அமைத்துத் தந்தனர். நமது உடம்பு முழுதும் உயிர் (ஆன்மா) கலந்து நிற்கிறது. அவ்விதமிருந்தாலும், சில பாகங்களை நாம் உயிர் நிலையாகக் கொள்வதே போல கோயில்களை இறைவன் அருள் பெருகும் இடங்களாகக் கொள்ளவேண்டும்.

நாம் கோயிலில் வழிபடும் இறைவன் ஒருவனே. அவரே சிவன் என்னும் செம்பொருள். கோயிலிற் காணப்படும் மூர்த்தங்கள் யாவும் அவரேயாவர். வெவ்வேறாகக் கருதலாகாது கணபதி, முருகன், தக்ஷிணாமூர்த்தி, வீரபத்திரர், வயிரவர், நடராசர் போன்ற மூர்த்தங்கள் ஒவ்வொன்றும் இறைவனது ஆற்றல்களையும் தத்துவப் பொருள்களையும் நிரூபிக்கும் தன்மையாக வெவ்வேறான தோற்றங்களுடனும் அந்தந்த பெயர்களுடனும் விளங்குவன. ஆகவே, இம் மூர்த்தங்களை வணங்கும் போது சிவன் எனவே வணங்குதல் வேண்டும்.

நாம் தோன்றிய காலந்தொட்டு நன்றிக்கும் மரியாதைக்கும் பெயர் பெற்றவர்கள். சாதாரணமாக, ஒருவருக்கொருவர் செய்யும் உபகாரங்களுக்காக நன்றியும் மரியாதையும் செலுத்தும் நாம் எல்லாவற்றிலும் மேம்பட்டு எல்லாம் செய்தருளும் கடவுளுக்கு நன்றியும் மரியாதையும் செலுத்தக் கடமைப்பட்டவர்களல்லவா? நம்மைப் படைத்தும், காத்தும் உலக வியாபகத்திலேயே சுழன்று அலுத்துப்போகாதவாறு பக்குவம் தெரிந்து அழித்தும் கருணைகாட்டும் பெருமானிடம் நாங்கள் எவ்வளவு நன்றியும் மரியாதையும் காட்டவேண்டும்? சாதாரணமாக எங்களைப் போல, மானிட உருவில் வரும் தாயைப்போலவே, கடவுள் நம்மிடம் எவ்வித பிரதியுபகாரமும் எதிர்பாராது நமக்கு வேண்டியவைகளை அவ்வக்காலத்திற் கொடுத்துக் காப்பாற்றுகின்றார். ஆனால், சாதாரண அறிவினாலே அதைக்காணமுடியாது. அவரிடம் அன்பைச் செலுத்தி, அது மிகுதியாவதற்குத் தக்கபடி அவரைக் காணும் அநுபவம் பெறமுடியும். அதற்கும் படிமுறையாகப் பலவழிகள் இருக்கின்றன. இருந்தாலும் கோயில் என்ற தனிஇடத்திற்குச் சென்று வழிபடுவதால் நமக்கு அன்பு மிகுதியாகப்பெருக வழியுண்டென்று எங்கள் மூன்னோர்கள் கண்டு அமைத்துள்ளார்கள், உலகில் செய்யும் ஒவ்வொரு தொழிலுக்கும் சிறப்பாக அதற்கும் தனிஇடம், நாம் அமைத்துக்கொள்ள வில்லையா? படிக்கப் பள்ளிக்கூடமும், அரசாங்கம் நடத்தத் தனித்தனியாகப் பிரிவுகைகளும், சாமான்வாங்கக் கடைகளும் நாம் அமைத்துக்கொண்டிருக்கிறோமல்லவா? அதுபோலவே, கடவுளிடம் செலலுதற்கும் கட்டுப்பாடுகள் நியதிகள் அமைந்திருக்கின்றன. (வளரும்)

## தந்தைவழி நின்று தக்க நூல்பல தந்த புலவர்மணி

### இறைவனடி எய்தினர் இளமுருகனார் அவர்கள்

வாழ்நாள் முழுவதையும் தமிழுக்கும் சைவத்துக்கும் உரிமைப்படுத்திய குடும்பங்களில் ஒன்று நவாலியூர் சோமசுந்தரப் புலவர் குடும்பம் தங்கத்தாத்தா என்று மங்காப் புகழ்படைத்த நவாலியூர்ப் புலவர் அவர்களின் சைவத் தமிழ் ஆர்வம் அப்படியே அமைந்த அவர்தம் சிரேட்ட புத்திரன் இளமுருகனார் அவர்கள் இளமை தொட்டுத் தமிழ்வளம் கைவரப் பெற்றவராய் அமிழ்தனைய செய்யுள் அமைக்கும் புலவராய் எழுத்தாளராய் நூலாசிரியராய் விளங்கிவந்தனர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகச் செய்த சேவையிலும் மேலதிகமாக நூல்பல எழுதித் தமிழக அறிஞர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தனர்.

ஈழத்துச் சிதம்பரபுராணம் என்ற அரிய புராணத்தைத் திறமையுடன் இயற்றிச் சென்ற ஆண்டு அரங்கேற்ற வைபவத்திற் கலந்து புகழ்பெற்ற புலவர்மணி இவ்வுலக வாழ்வுநீத்தமை சைவத்தமிழ் உலகிற்கோர் பெருநட்டமாகும்.

புலவர் மணியும் அவரது பாரியார் பண்டிதை பரமேஸ்வரியும் ஒருங்கமர்ந்து நூல்கள் இயற்றிய சிறப்பு தனி மதிப்புக்குரியது.

கண்டனம் எழுதும் பொழுதெல்லாம் அருங்கருத்தமைத்துப் பொருள்கொண்ட விமரிசனமாகச் செய்யும் ஆற்றல் புலவர்மணிக்கியல்பாயிருந்தது.

இந்துசாதனத்திற் பன்முறை அறிவுக்களஞ்சியமான கட்டுரைகள் வரைந்து வாசகநேயர்களை மகிழ்வித்த புலவர்மணி சைவ சமயநெறி பரப்பும் மெய்யன்பராகவும் விளங்கினார்.

## இசையோடு இயல்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

என்னும் பேரார்வத்துடன் நின்ற என்னை ஆதீனத் தொண்டரொருவர் உங்களைச் சுவாமி அழைக்கிறார் என்று தெரிவித்தார். திருவருளின் கருணையே இது என்று எண்ணிக்கொண்டு சென்றேன். ஆதீனச்சாலையில் சுவாமிகள் அமர்ந்தார்கள்.

தருமைக் குருமணியுடன் சுவாமிகள் எங்கெங்கு சென்று வந்தீர்கள், அவர்களுடன் தாங்கள் எவைபற்றிக் கலந்துரையாடினீர்கள், தாங்கள் எங்கெங்கே இம்முறை விரிவுரையாற்றினீர்கள் என்று கேட்டேன். அது அமையம் சுவாமிகள் கூறினார்கள்.

குருமஹா சந்நிதானமாகச் சென்னைக்கு நல்லைக் குருமணி அவர்கள் சென்ற அமையம் திருமயிலைக் கபாலீச்சரத்தில், தர்மகர்த்தா, நிர்வாக அதிகாரி ஆகியோர் கோயில் மரியாதைகளுடன் வரவேற்பளித்து சந்நிதிதோறும் தரிசனம் நடைபெற்றது, பின்னர் சமயப் பிரசார மண்டபத்தில் 'பழியஞ்சிய' திருவிளையாடல் விரிவுரையை நடாத்தும்படி கேட்டார்கள் விரிவுரையின் போது பெருந்திரளான மக்கள் சமூகமாயிருந்து பக்தி பரவசமாகக் கேட்டனர். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் குருமஹா சந்நிதானம்ஆகி அபிடேகம்பெற்றதை முன்னிட்டு ஆங்கு சில சைவப் பேரன்பர்கட்கு பொன்னாடை போர்த்தி பட்டமளித்துக் கௌரவித்தனர். திருமயிலைத் தர்மகர்த்தா செல்வநடராஜ முதலியார், 'திருக் கோயில்' இதழாசிரியர் ந. ரா, முருகவேள், திரு. எம். ஆர். தாமோதரன், அகில இந்தியவானொலி தென் பிராந்திய அதிபர் திரு. மி பா. சோமு, இராமநாதபுரம் திவான் லக்ஷ்மணராவ் செல்வி இரா, கௌரி ஆகியோர் முறையே, 'திருமுறைக் காவலர், சித்தாந்தரத்னாகரர், சைவபூஷணம், முத்தமிழ்வித்தகர், அறநெறிக் காவலர், கதா ரத்னம் என்னும் பட்டங்களைப் பெற்றனர்,

பட்டமளிப்பு வைபவத்தில் நமது பரமாசாரிய சுவாமிகள் பேசுகையில், "ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் ஆதீனத்தொடர்பால், பிணைப்பு கூடும் என்றும் தமது ஒரே ஒரு ஆதீனம் தமிழகத்தினுள்ள ஆதீனங்களுக்குச் சமமாய் சேவையில் பின்பற்றவும் இவ் விடத்து ஆதீனங்களின் பேராதரவு தமக்கு நிறைய இருப்பதும் திருவருட் டிறமே" என்றும் கூறினார்,

அடுத்து, மெய்கண்டார் ஆதீனம் அவர்கள் நல்லைக் குருமணி அவர்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் தமது வாழ்த்தில் எழுதியுள்ளது;

"சீலத் திரு. சுவாமிநாத தேசிக மகாசந்நிதானம் அவர்கள் நீடூழி வாழ்க. அவர்கள் திருமேனி நலம வளர்க;

தாங்கள் தம்பிரானாக இலங்கியபோதும் சந்நிதானக் கோலமேயுடையீர்கள். திருக்கோலம் புதிதல்ல — திருப் பெயர் மட்டுமே புதிது.

தங்கள் பிரசங்கங்கள் இசையோடு நிகழ்த்தப்படுவதால் இரு நாட்டிலும் பெரும்பாலார் இன்பம் அடைகின்றனர். பலர் பயன் பெறுகின்றனர்; தாங்கள் அனுப்பிய 'அருள் அமுதம், 'இந்துசாதனம்' முதலாம் பத்திரிகைகள்கண்டு பெருவியப்பும், மிகுமதிப்பும், நனி களிப்பும் உற்றேம்.

காஞ்சிபுரத்தில் சுவாமிகள் போந்து இங்குள்ள நன்மக்களுக்கு உபதேசம் செய்யலாம், முன்குறித்தே எழுதினால் நலம். சுவாமிகள திருவுள்ளம் யாதோ, அறிவித்தல் நன்று, வாழ்க திருமேனி; வளர்க அதன் நலம்' என்று வாழ்த்தியுள்ளனம்; சுவாமிகள் அண்மையில் பம்பாய் சென்று அவ்விடம் நடைபெற்ற நிகழ்ச்சிச்சுருக்கம் மறுவாரம்வளரும்.

— 'நாயன்மார் - நாதன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகளால் பயன் பெறுவோம்

—o—

காரைநகர் ஈழத்து சிதம்பர தேவஸ்தானத்தில் தேர் உற்சவத்தன்று இரவு இசைவாரிதி திருமுறைக் கலாநிதி சித்தன்கேணி எஸ், கே, சிவபாலன் அவர்களால் அண்மையில் தொகுத் தெழுதி வெளியிடப் பெற்ற "பயன் தரும்பண்ணிசை நூல்" அறிமுக விழாவின் போது காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் திரு சிற்றம்பலம் அவர்கள் நூலை விமர்சித்து திருமுறைகள் சைவத் தமிழ் மக்களின் பெருநெறிக்களஞ்சியம்இவற்றை பயன் வேண்டி ஓதிப்பழகக் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும் நூலாசிரியரின் சீரிய பணிகளைப் பாராட்டியும் பேசினர்கள் அடுத நூலின் முதற் பிரதியை நூலாசிரியரிடமிருந்து தேவஸ்தான அறங்காவலர் திரு. அ. ஆண்டிஐயா அவர்கள் பெற்றுக் கொண்டார். இறுதி நிகழ்ச்சியாக நூலாசிரியரின் பண்ணிசை கச்சேரி சிறந்த பக்கவாத்திய சகிதம் நிகழ்ந்தது.

தமிழகத்தினதும் ஈழத்தினதும் புகழ்மிக்க நாதசுர மேதைகளின் மங்கல வாத்தியக் கச்சேரி தேர் விழாவிலும் இன்றும் இடம்பெற்றது. மணிவாசகர் சபையினர் விழாக்காலத்தில் ஆற்றிய பணிகளும் அன்னதானத் தொண்டும் யாவராலும் என்றும் பாராட்டப் படவேண்டிய ஒன்ருகும். கொட்டும் மழையிலும் அடியார்கள் குதூகலத்துடன் தம் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்து பேரானந்தமுற்றனர். இ. ஒ கூட்டுத் தாபனத்தினர் அஞ்சல் செய்தனர்'

x x x

வண்ணைச் சிவன்கோவிலிலும், நல்லைச் சிவன் கோவிலிலும் திருவெம்பாவைவழிபாடு திருவாதிரை அபிடேகம் ஆகியவற்றின்போது ஏராளமான பக்தர்கள் கூட்டத்தைக் காணக்கூடியதாயிருந்தது

## வளாகம் வளமாக விளங்க வேண்டும்

'யாழ். வளாகம் நாளாந்த பல்கலைக்கழகம் போன்று பல இன, மத, பண்பாடுள்ள மாணவர்களும் ஒருங்கே கற்கும் சர்வதேசப் புகழுடைய வளாகமாக விளங்க வேண்டும்' - பிரபல பௌத்ததுறவியின் கருத்து.

யாழ். வளாகத்திலுள்ள 'பௌத்தமும் கல்வியும்' பற்றிப் பேசிய பிரபல பௌத்த குருவான வண. மெடிகே யஞ்ஞசிக தேரோ பேசிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவரைவிட கொழும்பு வளாகக் கல்வித்துறைப் பேராசிரியர் யு. டி. ஜயசேகர அவர்களும் வித்தியோதய வளாகத் தலைவர் பேராசிரியர் குலதிலக அவர்களும் அக் கூட்டத்திலே கலந்து உரையாற்றினர்.

## தமிழ்மொழியின் பதிவேடுகள் வடபகுதியில் 1976 1ம் மாதம் தொடக்கம்

1976ம் ஆண்டு முதலாம் மாதம் தொடக்கமாக வடபகுதி நீதிமன்றங்களிலே பதிவேடுகள் யாவும் தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டும் என்ற ஒழுங்கு உறுதியாகிவிட்டது.

நீதித்துறை மாநாட்டிற் கலந்துகொண்ட நீதி அமைச்சர் இவ்வுறுதிமொழியைக் கொடுத்தனர்.

தமிழ்மொழிப் பிரதேசங்கள் யாவற்றிலும் இவ்வொழுங்கு இன்னுஞ்சில மாதங்களில் நடைமுறைக்கு வரும் என்றும் அவர்கள் கூறினர்.

## சிவ தருமம்

1ஆம் பக்க வளர்ச்சி

வருஷம் கோப்பாயிலே ஒரு வித்தியாசாலை தாபித்திருக்கின்றேன். இந்தப்பிரகாரமே வடதேசத்திலும் இலங்கையிலும் ஊர்தோறும் வித்தியாசாலை தாபிக்கவும் தேவாலயந்தோறும் சைவப்பிரசங்கம் பண்ணுவிக்கவும் வேண்டும். இப்படிச் செய்யிற் கல்வியுஞ் சைவமும் தழைத்தோங்கும்.

வடதேசத்திலுள்ள பிரபுக்கள் பலர் தங்கள் தங்கள் ஸ்தலங்களிலே வித்தியாசாலைகள் தாபிக்கும்படி கேட்கின்ருர்கள்; அவைகளுக்குப் பொருளுதவி தாங்களே செய்ய உடன்பட்டிருக்கின்ருர்கள். மகிமை பொருந்திய சைவாதீனத்தார்கள் தங்கள் தங்களாலே நடத்தப்படுந் தேவாலயங்களிலே சைவப் பிரசாரகர்களை நியோகித்து வேதனங் கொடுத்துச் சைவப்பிரசங்கஞ் செய்விக்க உடன்பட்டிருக்கின்ருர்கள், இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும வேண்டப்படுவார்கள். ஆதலினலே, நல்லொழுக்கமும் விவேகமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் நூற்றுவரைச் சேர்த்து, தனித்தனி இருபது பிள்ளைகளையுடைய வகுப்பு ஐந்தாக வகுத்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்துக் கல்வி கற்பித்தல் வேண்டும், வருஷந்தோறும் தேர்ச்சி யடைந்த முதல் வகுப்புப் பிள்ளைகள் இருபதின்மர் வித்தியாசாலையை அடுக்க ஐந்தாம் வகுப்பின் பொருட்டு இருபது பிள்ளைகள் சேர்க்கப் பட்டு வரல்வேண்டும். இப்படிக் கற்றுத் தேர்ச்சி யடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகித்தல் வேண்டும்;

இதன்பொருட்டு ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு எழுநூறு ரூபா செலவாகும்

இவ் வித்தியாசாலையிலே சேரும் பிள்ளைகள் உயர்வாகிய இலக்கணவிலக்கியங்களை நன்ருகக் கற்றுக்கொள்வார்கள் அம்மட்டோ, சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு ஓரதிபதிக்கும் அவ்வதிபதியின் அதிகாரத்துட்பட்ட உபாத்தியாயர்களுக்குங் கீழ்ப்பட்டிருந்து, அநுட்டானம, பஞ்சாட்சர ஜெபம், சிவபூசை, சிவலாய தரிசனம், தேவார திருவாசகமோதல், சிவபுராணம் படித்தல், சிவசாத்திரம் படித்தல் முதலிய சிவபுண்ணியங்களை நாடோறும் அவ்வவற்றிக்கு ஏற்படுத்தப்பட்ட நேரங்களிலே நியமப்பிரகாரம் செய்து கொண்டு வருவார்கள் உற்சவகாலங்களிலே யாவருக்கும் சிவபக்தி செனிக்கும் படிக்கு, பெருந்திருக்கூட்டமாகிச் சுவாமிக்குப் பின்னே தாளந் தட்டித் தேவாரம் பண்ணுடனே ஓதிக் கொண்டு வருவார்கள்: ஒழுக்கத்திலும் சமயானுட்டானங்களிலும் தவறும் பொழுதெல்லாம் அதிபதியினலும் உபாத்தியாயர்களாலும் தண்டிக்கப் பட்டுத் திருத்தமடைவார்கள். வித்தியாசாலையை விடுக்கும் பொழுது உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கப்பட்டு ஊர்தோறும் வித்தியாசாலைகளிலே கல்வி கற்பித்துக் கொண்டு திருக்கோயில்களிலே சைவசமயத்தைப் பிரசங்கித்துக் கொண்டு சீவிப்பார்கள், இப்படியே தங்களுக்கும் பிறர்க்கும் பயன் படும்படி நற்செய்கைகளைச் செய்யும் இயல்புடையவர்களுக்கு அன்ன தானம் செய்வது எவ்வளவு பெரும் புண்ணியம்

மிகமேலாகிய இத்தருமத்தை நிறைவேற்றுதற்கு அங்கங்கே சபை கூட்டிப் பிரசங்கஞ் செய்து பொருளுதவி பெறும் பொருட்டு ஊர்தோறுஞ் சஞ்சரிக்கத் தொடங்கினேன், சைவசமயிகளே, சிவபெருமானுடைய திருபெருமானுடைய திருநாமம் விளங்கும் பொருட்டு நான் எடுத்த முயற்சியை நீங்கள் அவமதியாது நன்கு மதித்து உதவி செய்வீர்களென்று நம்பியே உங்கள் ஊருக்கு வருகின்றேன். சிவபெருமானே மெய்க் கடவுளென்று விசுவசித்து அவருடைய சின்னமாகிய விபூதியைத் தரிக்கிறவர் ஒவ்வொருவரும், இல்லையென்னுது சிறிதாயினும் பெரிதாயினும் தங்கள் தங்களால் இயன்றது உதவுவாராயின், நான் எடுத்த முயற்சி நிறைவேறி விடும் என்பதற்குச் சந்தேகமில்லை.

நீங்கள் இத்தருமத்தின் பொருட்டு உங்களுங்களால் இயன்ற மட்டும, நிலமாகவேனும், பணமாகவேனும், பனைமரம் பாலைமரம் முதலிய மரங்களாகவேனும் உபகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உபகரிப்பவர்கள் தங்கள் தங்கள் பெயரையும் ஊர்ப்பெயரையும், தந்தையர் பெயரையும், தொழிற் பெயரையும் அறிவித்தல் வேண்டும். உபகாரகர்கள் அவரவர் உபகரிந்த பொருட்டொகையும் வேதனத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப் படுத்தப்படும்.

நல்லூர், க. ஆறுமுகநாவலர்,
1 பிரமோதூத வருஷம்

## பிள்ளையார் கோவில் திருவெம்பாவைப் பஜனை

இவ்வாண்டு மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் திருவெம்பாவை நாட்களில் என்றும அதிகாலை ஐந்தரைமணிக்குதிருப்பள்ளி எழுச்சியும் பூசை நேரத்திலே திருவெம்பாவையும் பெண் அடியார்களாற் கூட்டாக ஓதப்பெற்ற சிறப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது.

## சமய தீட்சை

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் இந்து மாணவ மன்றத்தினர் ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமையன்று மேற்படி கல்லூரி மண்டபத்தில் சிவதீட்சை வைபவத்தை நடாத்தினர்கள். கல்லூரியின் மாணவர் பலரும் வெளியார் பலரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். தீட்சை பெற்றவர்களுக்கு மில்க்வைற் நிறுவனத்தாரின் 'தீட்சா மந்திரம்' என்னும் புத்தகம் வழங்கப்பட்டது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

வழ, இல. எம். பி. 13148

நல்லையா சுப்பிரமணியம் கீரிமலை — வழக்காளி

எதிராக

1, கதிரன் காருமணியும் பெண்
2. நேசமணியும் இருவரும் மண்ணிகுப்பை, மயிலிட்டி இருவரும் காலஞ் சென்ற 1ம், 2ம் எதிராளிகளான வயிரவன் சின்னனினதும் பெண் தெய்வானையினதும் சொத்துக்கு நீதிமுறையான பேராளர் என்ற வகையில்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B 13148ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு ஆண்டுக் காணியை 1975 ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி [29-12-1975] திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 3730/-ம் 30-5-72 தொடக்கம் 14-9-72 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 464-05 சதம்

### ஆதன விபரம்

வடமாகணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று முலவை இறை "சிலும்பிலானை" பர. நில இலா 16 இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் வெள்ள வாய்க்கால், மேற்கு ஒழுங்கை தெற்கு மாணிக்கம் அந்தோனிப் பிள்ளைக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம் இதடங்கலும்

அ. போ எதிர்மன்னசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

14, டேவிற் வீதி
யாழ்ப்பாணம், 30-10-75 — 109 28 - 123 19-12

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல, M B 2868

யாழ்ப்பாணம் அம்மன் ரோட்டு வேலாயுதர் நாராணசாமி (இறந்தவர்) — வழக்காளி

1. முருகுப்பிள்ளை சந்திரசேகரா அல்லது சந்திரசேகரம்
2. பெண் பசுபதியம்மா அல்லது சிறீமதி, இருவரும் உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்,

பதிலாக வைக்கப்பட்ட வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை அரசடி ரோட்டு வேலு முருகன் (இறந்தவர்)
யாழ்ப்பாணம், அரசடி ரோட்டு, 3ம் ஒழுங்கை இல. 167/8 முருகன் இராசு — இறந்த வேலு முருகனின் சட்டபூர்வமான பிரதிநிதியாக. — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 2868ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1975-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம் திகதி (29-12-75) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 4270/-ம் 10-6-59 தொடக்கம் 30-9-59 வரை ரூபா 3500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 250.20 ம் இதில் ரூபா 800/- கொடுபட்டதை நீக்கி.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணர்பண்ணை வட கிழக்கு இறை - கட்டைக்காடு நில. பர. 2ம் குளி 5, 11/16 ம் இதில் சொரியலாய் நில. பர. 1ம் குளி 7ம் (சொரியலான பகுதிக்காக ஆட்சி செய்யப்பட்டு வரும் பகுதி) இந்த நிலப்பரப்பு ஒன்றுக்கும் குளி ஏழுக்கும் எல்லை கிழக்கு வெள்ளையன் கந்தனின் ஆதனம், வடக்கு சின்னையன் பெண் இலட்சுமிககு உரிமையான முழுக் காணியில் மீதியாயிருக்கும் பகுதிகள், மேற்கு கையொழுங்கை, தெற்கு சோதி மாணிக்கத்தின் ஆதனம். இதடங்கலும் இதற்குள் இருக்கும் வீடும் கிணற்றில் பங்கும் வடக்கெல்லைக் காணியில் தூர்வையும் அதற்குரிய வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். பதிவு ட 243/300.

2. மேற்படி வண்ணர்பண்ணை வட கிழக்கு இறை - நீர் நொச்சியடியும் கட்டைக்காடும் நில, பர. 6ம் குளி 9ம் இதில் நில. பர. 2ம் குளி 11ம் இது உத்தரவு பெற்ற உலாந்தா என். தம்பு அவர்களால் தயாரிககப்பட்டு 22-9-1952 ம் திகதியிடப் பட்ட 69ம் இலக்கப்படத்தில் 1ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த பிரிக்கப்பட்ட நில. பர. 2ம் குளி 11ம் பயிர்வகைகளும் கீழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் இதற்குரிய வழிவாய்க்காலும் 3ம் 4ம் துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ள முறையே 2, 1/5 குளியும் 2, 2/5 குளியும் கொண்ட கையொழுங்கையிற் பங்கும், 4ம் துண்டாகக் காட்டப்பட்ட கையொழுங்கையின் மேற்கு எல்லையிலிருந்து போகும் கையொழுங்கையின் பங்கும். இக் கையொழுங்கை பிரதான ஒழுங்கைக்குப் போக்கு வரத்துக்குரியது. இதன் எல்லை கிழக்கு இனுமர் செல்லரின் ஆதனம், வடக்கு குளம், மேற்கு சின்னவன் கணபதியினதும் வேலு துரையினதும் ஆதனம், தெற்கு குறித்த படத்தின் 3ம் துண்டாகக் காட்டப்பட்ட புதிதாக வைக்கப்பட்ட கையொழுங்கை.

சு. கந்தசாமி
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.

19, சுவாமியார் வீதி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் — 124 19-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

ஞாலமதில் ஞானநிட்டை உடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரணமில்லை
குணமில்லை குறியில்லை குலமுமில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர் குணம் மருவிப்
பாடலினோ டாடலிவை பயின் றிடினும் பயில்வர்.

Devotees who have attained calmness of mind through Gnanam, they have no likes or dislikes, nothing to wish for, no need for social or religious etiquette or penance or austerities, no rules of conduct or meditation to conform to, their hearts are pure. they care not for outward appearances, they are not led astray by their bodily or mental faculties they have no standards of decorum or marks or caste. rules to follow. They sing and dance at times like children, mad men and people possessed with the devil.

Hindu Organ

FRIDAY. DECEMBER 19, 1975

## Screening Students from the Silver Screen

The increase in the number of picture palaces in the City is obviously tending to interfere with the educational sphere. The proposal that advertisements of the program of theatres should be banned in the neighbourhood of educational institutions is to be welcomed. But the temptation of cinemas will still remain so long as the accessibility to theatres is easy.

The silver screen was never intended to become a menace to the country. It has its educational value, its cultural significance and its duty by society. However, the modern world, steeped as it is in sensualism, has found in the industry of films enough scope for rank materialism. How far this dangerous trend has tainted society can be gauged from the degree of inclination it has induced among the student population The shows and the attendant advertisements are so designed as to make an artful impression on the mind of the youth and lead them astray Notwithstanding all this positive threat, society does not seem to have been awakened to the enveloping danger. Religious associations have not made any serious effort to stem this tide of sensualism.

In the sphere of education the interference from the film industry is increasingly aggressive. Not even one in a hundred pictures is wholesome as far as the school going are concerned. It is therefore necessary that some precaution should be taken to protect students from the evil effects of the Silver Screen. The negative method of prohibition may be attempted. But there is a positive step that can ensure encouraging results.

Every educational institution must be provided with its own theatre for dramas, musical entertainments and film shows. The pictures for screening in these theatres must be selected by educationists with a view to catering for the students in this direction within the bounds of moral culture. Such a scheme will eventually keep the students away from the professional picture palace.

## Religion—Relegated to Second Place!

In the scheme of studies for the N. C. G. E. Examination it is understood that Religion as a subject has been considered to be so unimportant as not to be included in the category 'Compulsory'. The due recognition that has been gradually given to 'Religion' in the syllabus for G. C. E. Examination appears to have been ignored in the present scheme. That 'Religion' must have a place along with the three 'R's' is a conclusion which has been arrived at in all countries that honour religion. It is inexplicable that in Sri Lanka where religion has its hallowed place, its study has not been recognized as essential in the syllabus for the N. C. G. E. Examination.

Here is a cause that has to be championed by all educationists if the testing of knowledge by means of Examinations should be really fruitful. What does it profit a student to learn the Arts and the Sciences if he does not know his religion.

Saiva organizations must move immediately in the matter and obtain for 'Religion' its rightful recognition as a 'Compulsory' subject for the N. C. G. E. Examination.

## Vedantam and Siddhantam

### A Study of the Svetasvatara Upanishad

### ( By A Science Graduate )

(Continued from the last issue)

The two are thus found to be kept apart there, in watertight compartments as it were. This is not so in India. Here the two are found together, and they are not divorced one from the other. Practically every religion and religious sect in India has a philosophical background behind it. The Saiva System, for instance, is both a religion and a philosophy So are the so-called six systems of Indian philosophy. They are both philosophies and religions. Even Buddhism and other systems which are generally classed as lying outside the pale of Vedic religion are no exception to this rule. They are not only religions but also philosophies. The term *Samayam* frequently met with in our sacred literature is thus found to denote both religion and philosophy. It is an admixture of both religion and philosophy. It may be defined as "religion *cum* philosophy" or philosophical religion and should be so understood regardless of the word or words used in translating it.

## NOTICE

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

No. 13155

Vaithialingam Muttusamy of Puloly West
Plaintiff

Vs.

1 Kandiah Rasiah and wife
2 Pakkiyaledchumy of Puloly East. Point Pedro
3 Sabapathipillai Thambirasa and
4 Wife Saraswathy of Alvai South
5 Sinniah Sivanandan and wife
6 Jeyaledchumy of Goldsmith Street, Atchuvely
Defendants

To:

It is hereby notified that action No. 13155 has been instituted in the District Court of Point Pedro under the partition act No. 16 of 1951 for the partition/sale of the land/lands called Sathalvattai in extent 9 Lms & 14 Kls. and situated Alvai Veerakodiakurichy in Kaddaiveli Parish.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 23rd day of January 1976 at 9 O'clock of the forenoon.

By order of Court,
A. Thavarajah
for Secretary/Chief Clerk

This 9th day of December 1975.

35. 19/12

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday December 19, 1975.

Editor-in-Chief R. N. Sivapirakamus

## Case Records in Tamil in Northern Courts

Mr F.D. Bandaranaike, Minister of Justice, making a clarification of the recent decision to implement the Language of the Courts (Special Provisions) Law stated at the Conference of Judicial officers yesterday (18-12-75) as follows:—

At present case records in all Courts were required to be kept in the Sinhala language only. Upon the implementation of the Language of the Courts (Special Provisions) Law, it will become mandatory to keep case records in the Tamil Language in all Courts in the Northern and Eastern Provinces except in Trincomalee, Mutur, Amparai and Vavuniya. The reason why the status quo is being maintained in these four areas is that a mixed population of Sinhala and Tamil speaking persons now live within the judicial boundaries as at present demarcated. It is intended to re-demarcate the boundaries of Trincomalee, Mutur, Amparai and Vavuniya in such a way that new judicial divisions will be created which will be either predominantly Sinhala-speaking or predominantly Tamil-speaking. After the re-demarcation takes place, the Language of the Courts (Special Provisions) Law will be enforced in the newly created predominantly Tamil speaking areas too The re-demarcation can only be done by regulations which have to be approved by the National State Assembly.

*Letter to the Editor*

## Study—Centre For Saiva Literature

Sir,

The suggestion made in the Editorial columns of the 'Hindu Organ' of December 5th, 1975 under the above caption is very praiseworthy and worthy of implementation without delay. A beginning could be made early. From a humble start, the undertaking could be, gradually from time to time, enlarged. Our respected Mudaliyar Muttuthamby's library could form a nucleus.

S. SIVASUBRAMANIAM
Life Member Saiva
Paripalana Sabhai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org